# ஹொரொவ்பொதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தின் செயலாற்றல்




அறிக்கை இல : ஜாஎன்/எப்/டப்பிளியூசீ/19/பீஆர்/11

---

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

## பொருளடக்கம்


| இலக்கம் | | விடயம் | பக்க இல |
|---|---|---|---|
| ---------- | | --------- | ---------- |
| **1.0** | | நிறைவேற்றுபொழிப்பு | **1-2** |
| **2.0** | | அறிமுகம் | |
| | **2.1** | பின்னணி | **3-8** |
| | **2.2** | கணக்காய்விற்கான அதிகாரம் | **8** |
| | **2.3** | அறிக்கை வெளியிடுவதற்கான பின்னணி | **8** |
| | **2.4** | கணக்காய்வு நுழைவு | **8-9** |
| | **2.5** | கணக்காய்வு நோக்கங்கள் | **9-10** |
| | **2.6** | கணக்காய்வு அளவுகோல்கள் | **10** |
| | **2.7** | கணக்காய்வு நோக்கெல்லை | **10-11** |
| | **2.8** | நோக்கெல்லையின் வரையறைகள் | **11** |
| **3.0** | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | |
| | **3.1** | யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு தொடர்புடைய பூமி தெரிவு செய்தல். | **12-15** |
| | **3.2** | யானைகள் தடுப்பு மத்திய நிலையமொன்றில் காணப்பட வேண்டிய தேவைகள் | **15-17** |
| | **3.3** | தடுக்கப்பட்ட வன யானைகளின் தேவைகளை நிறைவேற்றல். | **17-21** |
| | **3.4** | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படல் | **21-24** |
| | **3.5** | லுனுகம்வெஹெ யானைகள் தடுப்பு மத்திய நிலையம் | **24-26** |
| **4.0** | | பரிந்துரைகள் | **27-28** |

## 01. நிறைவேற்றுபொழிப்பு

-------------------------------

வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் நிகழ்காலத்தில் முகம் கொடுக்கின்ற மிகவும் கடுமையான சவாலாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பது யானைகள் - மனிதர்கள் மோதல் ஆகும். அதன் நீண்ட கால விளைவாக, வன சீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களிலிருந்து வெளி பிரதேசங்களில் யானைகள் முழுமையாக ஒழிப்பு மற்றும் பயிர்செய்கை, சொத்து மற்றும் மனித உயிர்கள் இழக்கப்படுதல் ஆகும். இந்த யானைகள் மனிதர்கள் மோதல் காரணமாக ஏற்படுகின்ற உயிர், சொத்து மற்றும் பயிர்செய்கை பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளும் இலக்குடன் வன்முறையான ஆண் யானைகளை அடைத்து மறு வாழ்வழிப்பதற்கு நான்கு யானைகள் தடுப்பு நிலையங்கள் நிர்மாணிப்பதற்கு 2012 ஆம் வரவு செலவு திட்டத்தில் ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. 2012 மார்ச் 17 திகதிய 12/0151/549/001 இலக்க அமைச்சரவை குறிப்பாணையின் பிரகாரம் அநுராதபுரம் பிராந்தியத்தின் ஹொரொவ்பதான பிரதேசத்தில் 997 ஹேக்கர் நிலத்தினுள் வன யானைகள் தடுப்பு நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் முதலாவது நிர்மாணிக்கப்பட்டு அதன் வெற்றி ஆய்வு செய்யப்பட்டதன் பின்னர் மற்றைய யானைகள் தடுப்பு நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக தீர்மாணிக்கப்பட்டிருந்தது.

யானைகள் மனிதர்கள் மோதல் காரணமாக ஏற்படுகின்ற யானைகள் மனிதர்கள் மரணம், சொத்து மற்றும் பயிர்செய்கை பாதிப்பு குறைத்துக் கொள்வதற்காக வன்முறையான ஆண் யானைகள் அடைத்துவைத்து மறு வாழ்வு அளித்தல், ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் நிர்மாணித்தலினூடாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்ற ஆய்வு இந்த கணக்காய்வின் நோக்கமாகும். மேலும், ஹொரொவ்பதான யானைகள் மத்திய நிலையம் அமைந்துள்ள நிலத்திற்கு தாங்கக்கூடிய உட்சபட்ச கொள்ளளவு தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமல் 30 வன்முறையான யானைகள் முழுமையாக பராமரித்தல் நோக்கத்தினை கொண்டிருத்தல் விளைவாக, யானையின் வாழ்க்கையுடன் தொடர்புடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இயலாதிருந்ததுடன் விலங்குகளுக்கு இயற்கையான நடத்தை கோளம் அறிவிப்பதற்கு முடியுமான வகையில் உயிர் வாழ்வதற்காக தேவையான சுற்றாடல் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

2019 யூன் மாதம் நடைபெற்ற யானைகள் புள்ளிவிபர அறிக்கையின் பிரகாரம் தடுப்பு மத்திய நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட யானைகளில் 12 யானைகள் இறந்து காணப்பட்டதுடன், அதில் 5 யானைகள் போதுமான ஆகாரம் இல்லாமை மற்றும் ஊட்டச்சத்து குறைப்பாட்டின் காரணத்தினால் இறந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும்

இரண்டு யானைகள் கவனக் குறைப்பாட்டுடன் தடுப்பு மத்திய நிலையத்திற்கு இடமாற்றப்பட்டமையினால் இறந்தன. தடுப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட யானைகளின் சுகாதார நிலை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன், அவ் விலங்குகளின் சுகாதரர நிலை தொடர்பான பின்னூட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

997 ஹேக்கர் நில பிரதேசத்தினை கொண்ட ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு நிலையத்தினை சுற்றி 16 கி.மீ நீளமான மின்சார வேளி நிர்மாணிப்பதற்காக ரூபா 159.48 மில்லியன் செலவொன்று ஏற்கப்பட்டிருந்ததுடன், அதன் தரம் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சனைகள் காரணமாக யானைகளினால் மின்சார வேளிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்டவாறு ஒட்டுமொத்தமாக ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் அமைத்தலின் நோக்கத்தினை நிறைவேற்ற முடியாது காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நிலைமைக்கு பதிலாக தடுப்பு மத்திய நிலையத்திற்கு யானைகள் விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து தொடர்ந்து அவ் யானைகளின் பாதுகாப்பு தொடர்பாக மேற்பார்வை செய்தல் வேண்டும் என, பிரதான தேவைகள் நிறைவேற்றிக் கொள்வதற்கு தகுதியான சுற்றாடல் உருவாக்கல் வேண்டும் என, யானைகள் தொடர்பாக முறையாக பின்னூட்டல் மேற்கொள்ளல் மற்றும் அதை அடிப்படையாக கொண்டு விலங்குகளின் நலன் முறையாக பேணப்படல் வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது. வேறு தடுப்பு மத்திய நிலையங்கள் நிர்மாணிப்பதற்கு முன்னர் ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் வெற்றியடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது.

ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தில் மேற்குறிப்பிட்ட குறைப்பாடுகள் காணப்படுகையில் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் உலக வங்கியின் நிதியினால் ESCAMP செயற்திட்டத்தின் கீழ் லுனுகம்வெஹெர தேசிய பூங்காவிற்குள் புதிய யானைகள் தடுப்பு நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

## 02. அறிமுகம்

---------------

### 2.1 பின்னணி

--------------

#### 2.1.1 யானைகள் மனிதர்கள் மோதலினால் ஏற்படுகின்ற பாதிப்பான நிலை

---------------------------------------------------------------------------------------------

(அ) இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச சங்கத்தின் (ICUN) சிவப்பு தரவுகள் புத்தகத்திற்கு அமைய ஆசிய யானைகள் அழியக் ˙கூடிய இனமாகும். வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினூடாக 2011 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்களின் அடிப்படையில் இலங்கை யில் காணப்படும் மொத்த காட்டு யானைகளின் எண்ணிக்கை 5,879 ஆகும். ஏறத்தாழ 20 மில்லியன் மக்கள் தொகை வாழும் இலங்கை உலகத்தின் அதிக மக்கள் தொகையினர் வாழும் நாடுகளில் ஒரு நாடாக காணப்படுவதுடன், பிரதான வாழ்வாதாரமாக விவசாயம் காணப்படுகின்றது. விவசாயம் மற்றும் மனித இருப்பிடம் விரிவாகலின் காரணமாக யானைகள் வாழ்வதற்கு தேவையான இருப்பிட நிலம் வரையறைக்குட்படல் காரணத்தினால் யானைகள் மனிதர்களின் மோதல் அதிகமாகியுள்ளன. இந்த மோதல்கள் தீர்ப்பதற்கு அல்லது குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்காவிடின் தற்போது காணப்படுகின்ற யானைகளின் பெரும் பகுதியினை இழக்க நேரிடும்.

(ஆ) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மற்றும் சட்டத்திற்கு முரணாக ஏற்படுகின்ற அழிவின் காரணத்தினாலேயே நில பயன்பாடு மாற்றங்கள், பயன்படுத்தக்கூடிய செறிவூட்டப்பட்ட இடங்களின் சரிவு மற்றும் குறைந்து செல்லல், யானைகளின் உணவுகள் பற்றாக்குறையின் காரணமாக யானைகள் கிராமங்களுக்கு உட்பிரவேசித்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக யானைகளின் பாதைகளை தடைசெய்தல் போன்ற காரணங்களினால் யானைகள் மனிதர்கள் மோதல் தற்போது தீவிரமாக அதிகரித்துள்ளது. அக் காரணத்தினால் காட்டு யானைகளினால் மனிதர்களுடன் ஏற்படுகின்ற மோதல்களால் மனித உயிரிழப்பு, காட்டு யானைகள் இறத்தல், சரிர உபாதைகள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் முன்னுரிமை பெற்று காணப்பட்டன. யானைகள் மனிதர்கள் மோதல் அதிகரித்தல் காரணமாக பின்வருமாறு கடந்த 05 வருடங்களினுள் யானைகள் மரணம், மனிதர்கள் மரணம், சொத்துக்கள் பாதிப்பு மற்றும் சரீர உபாதைகள் ஏற்பட்டிருந்தன.

| வருடம் | யானைகள் மரணம் | மனிதர்கள் மரணம் | சொத்து பாதிப்புக்கள் | சரீர உபாதைகள் |
|---|---|---|---|---|
| -------- | ---------- | ----------- | ------------ | -------------- |
| **2014** | **231** | **67** | **1279** | **82** |
| **2015** | **205** | **63** | **1120** | **55** |
| **2016** | **279** | **88** | **1593** | **87** |
| **2017** | **256** | **87** | **1302** | **75** |
| **2018** | **319** | **96** | **838★** | **37★** |
| **2019** ஒக்தோபர் 28 ஆம் திகதிக்கு | **364** | **110** | **993★** | **55★** |

★மாவட்ட செயலாளர் அலுவலகங்களினூடாக இழப்பீடுகள் வழங்கப்படுவதனால் திணைக்களத்திடம் முழுமையான தகவல்கள் இல்லை.

### 2.1.2 யானைகள் பாதுகாப்பு தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தல்

யானைகள் பாதுகாப்படுவதன் தேசிய முக்கியத்துவத்தினை அடையாளப்படுத்திக் கொண்டு காட்டு யானைகள் பாதுகாப்பதற்காக அமைச்சரவினால் “ இலங்கையின் காட்டுயானைகள் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை” என்ற கொள்கைகள் நடைமுறைப்படுத்துவதற்காக வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 2006 செப்தெம்பர் 20 ஆம் திகதி அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காட்டு யானைகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையினுள் பின்வருமாறு 06 கொள்கை அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) இலங்கையின் வனங்களின் நிலைமையினுள் யானைகளின் நீண்டகால ஆயுளை உறுதிசெய்தல்.

(ஆ) யானைகள் மனிதர்களின் மோதல் குறைத்தல் மற்றும் தடுப்பதற்கு செயற்படல்.

(இ) யானைகள் பாதுகாப்பினூடாக சமூக பொருளாதார பிரதிலாபம் பெற்றுக்கொள்ளல்.

(ஈ) யானைகள் மனிதர்கள் மோதல் காரணத்தினால் பாதிப்பிற்குள்ளாகும் சமூகத்திற்கு ஏற்க நேரிடும் செலவை தீர்த்தல்.

(உ) முகாமைத்துவ தேவையின் அடிப்படையில் காடுகளிலிருந்து யானைகள் வெளியேற்றலுக்கான ஒழுகுப்படுத்தல் வழிமுறைகளை உருவாக்குதல்.

(ஊ) காட்டு யானைகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் மையப்படுத்திக் கொண்டு அறிவியல் ஆய்வுகளை ஊக்குப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட கொள்கைகள் பிரகாரம் இரண்டாவது கொள்கை, காட்டு யானைகள் - மனிதர்கள் மோதல் குறைத்தல் மற்றும் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தலின் கீழ் எப்போதும் பயிர்செய்கைகளை ஆக்கிரமிக்கும் யானைகள் மற்றும் சொத்து பாதிப்பை ஏற்படுத்தும் யானைகளை வெளியேற்றுவதற்காக அனுகுமுறை தேவையென சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

**2.1.3 காட்டு விலங்குகளின் நலன்**

----------------------------------------

விலங்கொன்று ஆரோக்கியமாக, வசதியாக, நல்ல ஊட்டச்சத்து உடைய நிலையொன்று மற்றும் பாதுகாப்பின் கீழ் தனது இயல்பான நடத்தையை வெளிக்காட்ட கூடியவாறு, பயம் மற்றும் மன அழுத்தம் இல்லாத நிலையொன்றில் வாழ்வதற்காக தேவையான வசதிகளை வழங்குதல் விலங்கு நலனாக உலக மிருகக்காட்சி சாலை மற்றும் மீன் வள சங்கத்தினால் (WAZA) விளக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக நோய்களை தடுத்தல், கால்நடை சிகிச்சை தேவையான விதத்தில் பெற்றுக் கொடுத்தல், நிழல் முகாமைத்துவம், ஊட்டச்சத்து மற்றும் இரக்கமுள்ள விலங்குகளை பராமரித்தலும் விலங்கு நலனில் உள்ளடக்கப்படும்.

**2.1.4 2009 இன் 09 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டம்**

----------------------------------------------------------------------------------------------------

இலங்கையின் வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாத்தல், பரிசோதித்தல் மற்றும் அவ் வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் வணிக ரீதியில் பிரயோஜனத்திற்கு எடுப்பதனை தவிர்ப்பதற்காக இந்த சட்டத்தினூடாக சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அந்த சட்ட அதிகாரத்தினை

செயற்படுத்துவதன் பொறுப்பு வன சீவராசிகள் பாதுகாப்பு திணைத்திற்கு பணிக்கப்பட்டுள்ளது.

**2.1.5 வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பணி**

-----------------------------------------------------------------------------------------

நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக வன சீவராசிகள் பாரம்பரியத்தினை பாதுகாத்தலை நோக்கமாக கொண்ட இந்த திணைக்களத்தின் செயற்பணி மற்றவர்களுடன் செயற்பட்டு தொழில்முறை முகாமைத்துவத்தினூடாக வன சீவராசிகள் பாரம்பரியத்தினை பாதுகாப்பதாகும்.

**2.1.6 ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தின் ஸ்தாபனம்**

-----------------------------------------------------------------------------------

சனத்தொகை வளர்ச்சியுடன் ஏற்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களினால் வனங்கள் குறைதலுடன் காட்டு யானைகளின் இடப்பெயர்வு முறைகள் மாற்றமடைந்துள்ளன. அதன் விளைவாக யானைகள் கிராமங்களுக்கு உட்பிரவேசித்து வன் முறையாக நடத்தலினால் சொத்துக்களுக்கு மற்றும் மனித உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்றன. இந்த காரணத்தினால் யானைகள் - மனிதர்கள் மோதல் மிகவும் அதிகரித்துள்ளதுடன், வருடத்திற்கு ஏறத்தாழ 60, 70 மனித உயிர்களும், ஏறத்தாழ 200, 300 யானைகளும் இழக்கப்படுகின்றன. சரீர உபாதைகள், சொத்து பாதிப்புக்களும் அதிகமாக ஏற்படுகின்றன.

அதற்கு பதிலாக வெவ்வேறு பிரதேசங்களில் மிகவும் வன் முறையாக நடந்து கொள்கின்ற காட்டு யானைகளை பிடித்து நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் காணப்படும் தேசிய மிருக காட்சிசாலைகளுக்கு விடுவிக்கபட்டிருப்பினும் மீண்டும் காட்டு யானைகள் அவைகளின் சொந்த இடத்திற்கு வருகை தந்து முன்னர் விதமே மக்களுக்கு மிகவும் வன் முறையாக நடந்து கொண்டிருந்தன. அதனால் அவ்வாறு மக்கள் உயிர்களுக்கு பிரச்சனையாக நடந்துக் கொள்ளும் காட்டு யானைகளை பிடித்து மறுவாழ்வளிப்பதற்காக யானைகள் தடுப்பு நிலையங்கள் நான்கு நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டத்திலிருந்து நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதன் முதற் படியாக 2017 மார்ச் 17 ஆம் திகதிய **12/0151/549/001** இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அநுராதபுர பிரதேசத்தில் ஹொரொவ்பதான பிரதேசத்தில் 997 ஹேக்கர் நில பரப்பளவில் காட்டு யானைகள் பாதுகாப்பு மத்திய நிலையமொன்று ஸ்தாபிப்பதற்கு அனுமதி பெறப்பட்டிருந்ததுடன், கிரயம் ரூபா 345 மில்லியன் ஆன மத்திய நிலையம் 2015 வருடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

## 2.1.7 யானைகள் தடுப்பு நிலையம் ஸ்தாபித்தலின் நோக்கம்

---

ஹொரொவ்பதான மற்றும் லுனுகம்வெஹெர யானைகள் தடுப்பு மத்திய நிலையம் ஸ்தாபித்தல் தொடர்பான மூன்று வருட திட்டத்திற்கு அமைய ஹொரொவ்பதான மற்றும் லுனுகம்வெஹெர தடுப்பு நிலையங்களில் முறையாக 30 மற்றும் 50 யானைகள் தடுத்து வைக்கக்கூடிய விதத்தில் இரண்டு யானைகள் தடுப்பு மத்திய நிலையங்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் நோக்கங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) வன் முறையான காட்டு யானைகள் அவைகள் வசிக்கு இடங்களிலிருந்து நீக்குவதன் மூலம் யானைகள் - மனிதர்கள் மோதல்களை குறைத்தல்.

(ஆ) பிரச்சனையான பிரதேசங்களிலிருந்து வன் முறையான யானைகளை நீக்குவதன் மூலம் மக்களுக்கு சமூக பொருளாதார மற்றும் சமூக கலாசார பிரதிலாபம் பெற்றுக் கொள்ளல்

(இ) வன் முறையான 80 யானைகளை முழுவதாக பாரமரித்தல்

(ஈ) சுற்றுச்சூழல் சுற்றுலா வியாபாரத்தினூடாக யானைகள் தடுப்பு மத்திய நிலையம் பராமரிப்பதற்காக இந்த நிலம் சுற்றுலா இடமாக மற்றும் வருமானம் ஈட்டக்கூடிய சந்தர்ப்பமாக பயன்படுத்தல்.

## 2.1.8 பயனாளிகளுக்காக அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள்

---

(அ) வன் முறையான காட்ட யானைகளை அவைகளின் வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றல்.

(ஆ) யானைகள் மனிதர்களின் மோதல்களின் அளவை மற்றும் தீவிரத்தினை குறைத்தல்.

(இ) பாதிப்பிற்குள்ளான சன சமூகத்திற்கு பிரதிலாபம் பெற்றுக் கொடுத்தல்.

**2.1.9 யானைகள் குடும்பம்**

-------------------------------

யானை குடும்பத்தின் தலைவர் பிடி (பெண் யானை) ஆகும். இதற்கு காரணம் யானைகள் கூட்டத்தினுள் முதிர்ந்த ஆண் யானைகளை வைத்துக் கொள்ளாததாகும். இதனால் யானை குடும்பத்தினுள் இருப்பது முதிர்ந்த பெண் யானைகள் மற்றும் பெண் மற்றும் ஆண் குட்டிகள் மட்டுமே. ஆண் குட்டிகள் 09 தொடக்கம் 10 வயது காலத்தில் கூட்டத்தினை விட்டு சென்றுவிடும். அவ்வாறு செல்லாவிடின் முதிர்ந்த பெண் யானைகளினால் அந்த விலங்குகள் கூட்டத்திலிருந்து விரட்டப்படும். இவ்வாறு கூட்டத்தினை விட்டு செல்கின்ற அல்லது கூட்டத்திவிருந்து விரட்டப்படும் யானைகள் தனியான ஆண் யானைகள் என அடையாளப்படுத்தப்படும். 2011 ஆம் வருடத்தில் காட்டு யானைகளின் கணக்கெடுப்பிற்கு அமைய இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களில் 32.1 சதவீதம் காணப்படுவது தனியான யானைகள் ஆகும். கணக்கெடுப்பிற்கு அமைய இலங்கையின் காட்டு யானைகளின் குறைந்த எண்ணிக்கை 5,879 ஆவதுடன் தனியான யானைகள் 1,887 ஆகும்.

**2.2 கணக்காய்விற்கான அதிகாரம்**

---------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 3(1) (ஈ), 5(2), 12 (ஏ) உறுப்புரைகளின் பிராகாரம் எனது கட்டளையின் கீழ் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**2.3 அறிக்கை வெளியிடுவதற்கான பின்னணி**

----------------------------------------------------------

யானைகள் மனிதர்கள் மோதலுக்கு தீர்வொன்று தேடுதல் வன சீவராசிகள் திணைக்களத்திற்கு நிகழ்காலத்தில் காணப்படும் பிரதான பிரச்சனையாக காணப்படுகின்றது. ஒரு பதிலாக ஹொரொவ்பதான யானைகள் தடுப்பு நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், அது ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் அதன் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் அது தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய தரப்பினருக்கு அறிவிப்பதற்காக இந்த அறிக்கையின் முன் வைக்கின்றேன்.

## 2.4 கணக்காய்வு நுழைவு

### 2.4.1 ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பரிசோதனை

(அ) 1937 இன் 2 ஆம் (469 ஆவது அதிகாரம்) இலக்கமுடைய வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் அதற்கு தொடர்புடைய திருத்தங்கள்.

(ஆ) வர்தத்மானி அறிவிப்புக்கள், அமைச்சரவை தீர்மாணங்கள்.

(இ) இலங்கையின் காட்டு யானைகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை- 2006.

(ஈ) 2014 ஆம் வருடத்திலிருந்து 2018 ஆம் வருடம் வரை வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கைகள்.

(உ) ஹொரொவ்பதான மற்றும் லுனுகம்வெஹெர யானைகள் தடுப்பு நிலையங்கள் நிர்மாணித்தல் தொடர்பான மூன்று வருட திட்டம்.

(ஊ) ஹொரவ்பதான யானைகள் தடுப்பு நிலையத்தின் காட்டு யானைகளின் புள்ளிவிபரம் - 2019 வருட அறிக்கை.

(எ) வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துமூல அறிக்கைகள் விளக்கங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள்.

### 2.4.2 நேர்காணல்களை நடத்துதல்

சுற்றாடல் ஆர்வலர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் ஊழிர்களின் வாய்மூல மற்றும் எழுத்துமூல விளக்கங்கள்.

### 2.4.3 பௌதீக பரிசோதனைகள்

(அ) ஹொரவ்பதான யானைகள் தடுப்பு நிலையத்தின் நிர்மாணிப்பு பரிசோதனைகள்.

(ஆ) ஹொரவ்பதான யானைகள் தடுப்பு நிலையத்திற்கு வெளிநபர்களினால் வழங்கப்படுகின்ற உணவுகள் பரிசோதனை.

## 2.5. கணக்காய்வு நோக்கங்கள்

-------------------------------------

யானைகள் - மனிதர்கள் மோதல்களுக்கு தீர்வாக நிர்மாணிக்கப்பட்ட ஹொரவ்பதான யானைகள் தடுப்பு நிலையத்தில் பின்வரும் விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்று பரிசோதனை செய்தல் இவ் கணக்காய்வின் நோக்கமாக காணப்பட்டது.

(அ) யானைகள் தடுப்பு நிலையம் நிர்மாணிப்பதற்கு முன்னர் சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை பரிசோதித்தல்.

(ஆ) இந்த மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுகின்ற யானைகளின் வாழ்விட செறிவூட்டல்.

(இ) யானைகளின் இயல்பான நடத்தை கோலத்தை அறிக்கையிடுவதற்கான திறன்.

(ஈ) வன் முறையான யானைகளுக்கு மறுவாழ்வளிக்கும் முறைகள்.

(உ) இந்த மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டதன் காரணத்தினால் முந்திய வருடங்களுக்கு இணையாக யானைகள், மனிதர்கள் மரணம் மற்றும் சொத்துக்கள் பாதிப்பு குறைந்துள்ளதா என பரிசோதித்தல்.

## 2.6 கணக்காய்வு அளவுகோல்கள்

-----------------------------------------

பின்வரும் சட்ட திட்ட பிரமாணங்கள் மற்றும் செயற்திட்ட அறிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

(அ) 1937 இன் 2 ஆம் (469 ஆவது அதிகாரம்) இலக்கமுடைய வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் அதற்கு தொடர்புடைய திருத்தங்கள்.

(ஆ) ஹொரொவ்பதான மற்றும் லுனுகம்வெஹெர யானைகள் தடுப்பு நிலையங்கள் நிர்மாணித்தல் தொடர்பான மூன்று வருட திட்டம்.

(இ) ஹொரவ்பதான யானைகள் தடுப்பு நிலையத்தின் காட்டு யானைகளின் புள்ளிவிபரம் -2019

(ஈ) ஹொரவ்பதான யானைகள் தடுப்பு நிலையத்திற்கு சேர்க்கப்பட்ட யானைகளின் நடத்தை கோலம் தொடர்பான ஆய்வு அறிக்கை.

(உ) யானைகளின் நடத்தை கோலம், யானைகளின் உணவு கோலம் மற்றும் யானைகளின் சமூக நடத்தை தொடர்பான உயிரியல் அம்சங்கள்.

2.7 **கணக்காய்வு நோக்கெல்லை**

-----------------------------------------

என்னால் உச்ச கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு தரங்களுக்கு (ISSAI 3000 - 3200) அமைவாக எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த செயலாற்றல் கணக்காய்வு ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் மற்றும் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள லுனுகம்வெஹெர யானைகள் தடுப்பு மத்திய நிலையம் பரிசோதிப்பதற்காக எல்லைக்குட்படுத்தப்பட்டது. தடுப்பு மத்திய நிலையத்தில் வசிக்கும் யானைகளுக்கு உணவு மற்றும் குடிநீர் வழங்கல், சுகாதார வசதிகள் வழங்கல், நிழல் முகாமைத்துவம் மற்றும் யானைகள் மனிதர்கள் மோதல்களை குறைத்தலுக்காக ஹொரவ்பதான யானைகள் மத்திய நிலையத்தின் பங்களிப்பு மதிப்பீடு செய்யப்படுகின்றதுடன், 2015 ஒக்தோபர் 16 ஆம் திகதியிலிருந்து 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

2.8 **நோக்கெல்லையின் வரையறைகள்**

-----------------------------------------------

இந்த அறிக்கை தயாரிக்கும் போது எனது நோக்கெல்லை பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டன என வலியுறுத்தப்படுகின்றது.

(அ) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் தாமதமாக முன்வைக்கப்பட்டமை.

(ஆ) தரவுகள் இற்றைப்படுத்தப்படாமை.

(இ) விலங்குகளின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் களஞ்சியம் இல்லாமை.

## 03. கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------

### 3.1 யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு தொடர்புடைய பூமி தெரிவு செய்தல்.

----------------------------------------------------------------------------------------------

#### 3.1.1 சுற்றாடல் ஆய்வு அறிக்கை

------------------------------------------

ஹொரவ்பதான வன யானைகள் தடுப்பு மத்திய நிலையம் அமைந்துள்ள வனம் இரண்டாம் நிலை இயல்புடைய உலர் கலந்த பசுமையான காடாகும். இவ்வாறான காடுகளில் விதான அடுக்குகளுக்கு இணையாக மரங்கள் தூரமாக காணப்படுகின்ற வாற்பாக்கம் தண்டுகளுடைய பழு, வீர போன்ற தாவரங்களை கொண்டுள்ளது. இந்த காடுகளில் யானைகளுக்கு மேலதிகமாக எருமைகள், மான்கள் போன்ற வெவ்வேறு விலங்குகள் வாழ்வதுடன், தடுப்பு மத்திய நிலையம் நிர்மாணிப்பதற்கு எதிப்பார்க்கப்பட்ட நில அளவு சுற்றி யானைகள் வேளி அமைத்தல் வேண்டும். அந் நிர்மாணிப்பிற்கு முன்னர் அங்கு வாழ்கின்ற அனைத்து விலங்குகள் தொடர்பாக எண்ணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு அந்த பிரதேசத்திலிருந்து அகற்றல் வேண்டும். அத்துடன் யானைகள் வேளி நிர்மாணிக்கப்டும் போது காணப்படுகின்ற சில தாவரங்கள் அகற்ற நேரிடுகின்றது. இதனால் இந்த செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இதனால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்ய வேண்டியிருப்பினும் அது தொடர்பாக எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.2 போதுமான இடம் காணப்பகின்றமை

---------------------------------------------------

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை காடுகளுக்கு சதுர கிலோ மீட்டருக்கு யானைகள் தாங்கக்கூடிய உச்ச அளவு 0.2 ஆவதுடன் சதுர கிலோமீட்டர் 9.97 (997 ஹேக்கர்) ஆன இந்த தடுப்பு மத்திய நிலையம் அமைந்துள்ள வனம் இரண்டாம் நிலை அம்சங்களை கொண்ட வனமாகும். இந்த தடுப்பு மத்திய நிலையத்தின் யானைகளின் எண்ணிக்கை இயற்கையான சூழலுக்கு சமனாக பேனுவதற்கு எதிர்பார்க்கப்பட்டால் ஆக்கிரமிப்பு தன்மை கொண்ட தாவரங்களை அகற்றுதல், மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்தல், வெளிநபர்கள் வழங்குகின்ற உணவுகளின் பண்பினை உயர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் அந்ந நிலைமைகள் கவனத்திற்கொள்ளப்படாமல் 30 வன்முறையான யானைகள் 9.97 சதுர கிலோமீட்டரினுள் (997 ஹேக்கர்) தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 3.1.3 மற்றைய பல்லுயிர் பிரிவுகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு

---

2011 திசெம்பர் 06 திகதிய 1735/21 இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி பத்திரிக்கையினூடாக அறிவிக்கப்பட்ட 1,698.76 ஆன நில பிரதேசமான ஹொரவ்பதான தேசிய பூங்காவில் 997 ஹேக்கர் அதாவது 58 சதவீதம் இந்த தடுப்பு நிலையத்திற்காக பயன்படுத்தப்பட்டமையினால் அங்கு வாழ்ந்த மற்றைய விலங்குகளுக்கு அவைகளின் இருப்பிடம் இல்லாது போனது. அவ்வாறே முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விலங்குகள் அடையாளப்படுத்தப்படாமையினால் ஒரு எருமை, ஒரு பெண் யானை மற்றும் குட்டியொன்று யானைகள் வேளி அமைக்கப்பட்டதினால் வெளியேற முடியாமல் கணக்காய்வு திகதி வரையிலும் சிக்கி காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.1.4 யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தின் யானைகள் எண்ணிக்கை

---

ஹொரவ்பதான தேசிய பூங்கா அலுவலகத்தின் புத்தகத்திற்கமைவாக 2015 செப்தெம்பர் 04 ஆம் திகதியிலிருந்து 2019 யூன் 25 ஆம் திகதி மட்டும் காலக்கட்டத்திற்குள் நாட்டில் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து பிடிக்கப்பட்ட வன்முறையான யானைகள் 52 சந்தர்ப்பங்களில் தடுப்பு மத்திய நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

| வருடம் | விடுவிக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கை |
|---|---|
| **2015** | **10** |
| **2016** | **16** |
| **2017** | **11** |
| **2018** | **11** |
| **2019** முதல் **06** மாதங்கள் | **4** |
| | **52** * |

* ஒரு யானை யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திலிருந்து தப்பித்து ஓடியதன் காரணத்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2019 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் சேர்க்கப்பட்ட 52 யானைகளுள் 09 யானைகள் மட்டும் எஞ்சியுள்ளதுடன் 12 யானைகள் வெவ்வேறு காரணங்களினால் மரணித்திருந்தது. எஞ்சிய 31 யாணைகள் அந்த இடத்திலிருந்து தப்பி சென்றதா அல்லது இறந்துவிட்டதா என்ற தகவல்கள் திணைக்களம் வசம் காணப்படவில்லை.

(ஆ) மிருகக்காட்சிசாலையில் பிறந்த விலங்கொன்று வனசீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் வன சீவராசி விலங்கொன்றாக கவனத்திற் கொள்ளப்படாததுடன், உலக விலங்குகள் மற்றும் நீர்வள அமைப்பினால் **(WAZA)** வெளியிடப்பட்டுள்ள விலங்கு நலன் மற்றும் நெறிமுறைகளில் 10 வது பந்தியின் பிரகாரம் அந்த விலங்கு காட்டிற்கு பழக்கப்படுத்துவது படிப்படியாக மேற்கொள்ளல் வேண்டும். எனினும் மிருகக்காட்சி சாலைக்கு சொந்தமான இரண்டு யானைகள் இரு சந்தர்ப்பங்களில் எந்தவொரு முன் பயிற்சியும் இல்லாமல் தடுப்பு மத்திய நிலையத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

(இ) தடுப்பு மத்திய நிலையம் அமைத்தலின் பிரதான நோக்கம் சொத்துக்கள், உயிர்கள் மற்றும் பயிர்செய்கைகளை பாதிப்பு செய்கின்ற யானைகளை பிடித்து சேர்தலினூடாக யானைகள் மனிதர்கள் மோதல்களை குறைப்பதாயினும் அந்த நோக்கத்திற்கு மாறாக மிருகக்காட்சி சாலைக்கு சொந்தமான இரு யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) அந்த இரு யானைகளும் யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சுறுசுறுப்பாகவும், நல்ல உடல் நிலையிலும் மற்றும் நல்ல ஆரோக்கியமான நிலையிலும் காணப்பட்டமை அறிக்கையினூடாக அவதானிக்கப்பட்டது. எனினும் போதுமான உணவு பெறப்படாமையினால் 2016 ஒக்தோம்பர் 25 ஆம் திகதி ஜயது என்ற பெயருடைய யானை இறந்தமை மரண பரிசோதனை அறிக்கையில் குறிப்பிப்பட்டிருந்தது. மற்றைய யானை உயிருடன் இருக்கின்றதா அல்லது இறந்து விட்டதா என்ற தகவல்கள் திணைக்களம் வசம் காணப்படவில்லை.

3.2 யானைகள் தடுப்பு மத்திய நிலையமொன்றில் காணப்படவேண்டிய தேவைகள்

-----------------------------------------------------------------------------------

3.2.1 யானை வேலிகள் அமைத்தல்

------------------------------------

ரூபா 159.48 மில்லியன் கிரயம் செலவிடப்பட்டு 16 கிலோமீட்டர் நீளமான மின்சார வேலியொன்று 997 ஹேக்கர் நில பிரதேசமுடைய ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தினை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், இதன் நிர்மாணிப்பு பணிகள் 2012 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் வருடத்தில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சிறை தடுப்புக்கள், தடுப்பு நிலையங்கள், கலவரங்கள் குறைத்தல் போன்றவற்றிற்கு பயன்படுத்துகின்ற Concertina Razor Barbed பெயருடைய பெரிய சுருள்களினால் உருவாக்கப்பட்டுள்ள முட்கம்பிகள் ஹொரவ்பதான யானைகள் மத்திய நிலையத்தின் மின்சார வேலிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த கம்பிகள் வெட்டக்கூடிய கத்திகளுடன் மற்றும் முட் கம்பிகளினால் உருவாக்கப்பட்டுள்ளமையினால் மின்சார வேலிகளுக்காக பயன்படுத்துவதினூடாக விலங்குகளுக்கு காயம் ஏற்படலாம்.



(ஆ) அம்பாறை மஹவெவ பிரதேசத்திலிருந்து பிடிக்கப்பட்டு தடுப்பு மத்திய நிலையத்திற்கு விடுவிக்கப்பட்ட யானை தடுப்பு நிலையத்திலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்த போது கொங்கிரீட் தூணொன்று உடைத்ததினால் இரும்பு கம்பொன்றுக்கு கைகள் மற்றும் பாதங்கள்

காயப்பட்டிருந்ததுடன், பின்னர் பக்டீரியா தாக்கத்தினால் மரணித்திருந்தது.

### 3.2.2 குளங்கள் மற்றும் நீருற்றுக்களின் கட்டுமானம்

-----------------------------------------------------------------

ரூபா 3,312,778 மொத்த கிரயமுடைய 20,000 லீட்டர் கொள்ளளவை கொண்ட 05 குளங்கள் மற்றும் 2,000 லீட்டர் கொள்ளளவை கொண்ட 04 குளங்கள் 2018 மற்றும் 2019 வருடங்களில் நிர்மாணிக்கபடபட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிர்மாணிக்கப்பட்ட குளங்கள் மற்றும் நீருற்றுக்களுக்காக நீர் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டு நிரப்பப்பட வேண்டியதுடன், ஹொரவ்பதான தேசிய பூங்கா அலுவலகத்திற்கு நீர் பவுசர் இல்லாமை மற்றும் அப் பிரதேசங்களில் நீர் மூலங்களில் நீர் பற்றாக்குறை மீது இந்த குளம் மற்றும் நீருற்றுக்களுக்காக நீர் வழங்கப்பட முடியாது காணப்பட்டது.



(ஆ) விலங்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராச்சியாளர்களான “ மாரே ஈ பவுலர் மற்றும் சூசான் கே மீகோடாவினுடைய யானைகளின் அறிவியல், ஔடதம் மற்றும் அறுவை சிகிச்சை” தொடர்புடைய புத்தகத்தின் 5 ஆவது அதிகாரத்திற்கமைய சாதாரணமாக யானைக்கு ஒரு நாளைக்கு 200 லீட்டர் நீர் தேவைப்படுவதுடன், நீர் குளத்தில் சாதாரணமாக யானைக்கு ஒரு தடவையில் அடுக்கை நிரப்பிக்

கொள்ளக் கூடிய விதத்தில் நீர் காணப்படுதல் வேண்டும். எனினும் வரட்சியான காலத்தில் இந்த இடத்தில் குளங்கள் காய்ந்து விடுவதால் யானைகளுக்கு தேவையான நீர் கிடைக்கப்பெற மாட்டாது.

(இ) நீர் குளத்தின் தேவை மிகவும் தேவைப்படுவது வரட்சியான காலத்தில் ஆகும். எனினும் இந்த நீர் குளம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடும் போது வரட்சி காணப்படும் காலத்தில் நீர் பெறுவதற்கு முடியுமான வழி தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமையின் காரணத்தினால் நீர்மாணிக்கப்பட்ட பெரியபுலியங்குளம் 5 தூண் குளம் மற்றும் சியம்பலாபிடிய போன்ற குளங்களின் நீர் வரட்சியான காலங்களில் காய்ந்து காணப்பட்டன.







**3.3 தடுக்கப்பட்ட வன யானைகளின் தேவைகளை நிறைவேற்றல்.**

**------------------------------------------------------------------------**

**3.3.1 வன யானைகளின் உணவு தேவைகள்**

**--------------------------------------------**

வளர்நத யானைகளின் தினசரி சராசரி உணவுத் தேவை 300 கிலோ கிராம் ஆவதுடன், அத் தேவையை நிறைவு செய்வதற்கு சுமார் 17 மணித்தியாலம் உணவு உட்கொள்வதற்கு செலவழிப்பதுடன், யானைகள் உணவு உட்கொள்ளும் போது அதிகளவு நொருக்கி சிறிய துண்டுகளாக அழித்து போடும். அதனால் அந்த விலங்குகளுக்கு உணவு பெற்றுக் கொடுக்கும் போது அந்த விலங்கின் தேவையான 300 கிலோகிராமுக்கு மேலதிகமாக 100 கிலோகிராம் அல்லது அதற்கு நெருங்கிய அளவு பெற்றுக்கொடுத்தல் வேண்டும். தடுப்பு நிலையத்தில் 30 வன யானைகள் தடுத்து வைக்கப்பட்டால்

ஒரு நாளைக்கு உணவு தேவை 12,000 கிலோகிராம் ஆகும். இது தொடர்பாக பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 30 யானைகளுக்காக தினசரி உணவு தேவை 12,000 கிலோகிராமாக இருப்பினும் தடுப்பு நிலையம் காணப்பட்ட காடு இரண்டாம் நிலை பண்புகளுடைய காடென்பதனால் அந்த உணவு அளவு தடுப்பு மத்திய நிலையத்தினுள் காணப்படும் தாவரங்களின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது.

(ஆ) தடுப்பு மத்திய நிலையத்தினுள் புற் தரை அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பினும், மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த புற் தரை காட்டு யானைகளுக்கு உணவிற்காக எடுப்பதற்கு முடியாத வண்ணம் காய்ந்து காணப்பட்டன.





(இ) 2018 நவம்பர் 01 ஆம் திகதியிலிருந்து 2019 ஒக்தோம்பர் 31 திகதி வரையான காலப்பகுதிக்குள் தடுப்பு மத்திய நிலையத்தில் 30 யானைகளுக்காக தினசரி பலா இலைகள், கலப்பு இலைகள் மற்றும் 2,800 கிலோகிராம் பூசணிக்காய் வீதம் வழங்குவதற்காக ரூபா 26,133,700 ஆன பெறுமதியுடைய ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது இலை குலைகள் உணவுக்காக எடுக்கப்படாததனால் பாரிய அளவு இலை குலைகள் எஞ்சி காய்ந்து காணப்பட்டதுடன், இவ்வாறு வெளியே இருந்து வழங்கப்படுகின்ற உணவுகளின் தரம் தொடர்பாக போதுமான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தினசரி வெளியிலிருந்து வழங்கப்படுகின்ற உணவிலிருந்து காட்டு யானைகள் உணவிற்கு எடுக்கின்ற மற்றும் எஞ்சிகின்ற இலை குலை அளவு, அவற்றை அகற்றும் இடத்திற்கு வருகை தரும் யானைகளின் எண்ணிக்கை மற்றும் தினசரி அந்த இடத்திற்கு காட்டு யானைகள் வருகை தரும் தடவைகளின் எண்ணிக்கை தொடர்பாக ஆய்வு செய்யப்படாமல் காணப்பட்டதுடன் உணவுகள் போடப்பட வேண்டிய இடம் தொடர்பாக உறுதியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) வெயியேயிருந்து வழங்கப்படுகின்ற உணவு பொருட்களின் பாரம் நிறுப்பதற்கு தேவையான உபகரணங்கள் ஹொரவ்பதான வன சீவராசிகள் தள அலுவலகத்தில் காணப்படாததுடன், அதற்காக தனிப்பட்ட அரிசி ஆலையில் பொருத்தப்பட்டிருந்த தராசினை பயன்படுத்தப்பட்டிருப்பினும், பாரம் நிறுக்கின்ற இடத்திற்கு மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தொருவர் நியமிக்கப்படாமையினால் உணவு பொருட்களின் பாரம் சரியானதா என உறுதி செய்யப்படாமல் கொடுப்பணவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) காட்டு யானைகளுக்கு இலை குலைகள் வழங்குவதற்காக தகுந்த இலை குலைகள் அடையாளப்படுத்தப்படுவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்படாமையினால், புலி இலைகள் வழங்கப்படுவதற்கு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் புலி இலைகள் காட்டு யானைகள் உணவிற்கு எடுக்காமை கணக்காய்வின் போது உறுதி செய்யப்பட்டது.

(எ) 2019 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட யானைகளின் கணக்கெடுப்பின் பிரகாரம் இந்த மத்திய நிலையத்தில் காணப்படும் யானைகளின் எண்ணிக்கை 09 ஆக இருப்பினும் 30 யானைகளுக்காக உணவு வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2019 ஆகஸ்து 01 ஆம் திகதியிலிருந்து ஒக்தோம்பர் 31 மே் திகதி மட்டும் 21 விலங்குகளுக்காக ரூபா 6,559,245 பெறுமதியான மேலதிக உணவு வழங்கப்பட்டிருந்தன.

(ஏ) வெளியேயிருந்து வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்கள் தடுப்பு பகுதிக்கு உட்செலுத்துவதற்கு (வேளிக்கு மேலாக) முடியாமை கணக்காய்வின் போது அவதானிப்பட்டதுடன், உணவு தடுப்பு பகுதிக்கு உட்செலுத்துவதற்கு இலகுவான முறையில் பீட பூமி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வெளியேயிருந்து உணவு வழங்கல் தொடர்பான ஒப்பந்தம் 2019 ஒக்தோம்பர் 31 திகதி முடிந்திருப்பினும், வெளியேயிருந்து உணவு வழங்கலுக்காக புதிதாக டென்டர் அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2018 ஒக்தோம்பர் 30 திகதிய பெறுகைகள் குழு கூட்ட குறிப்பு இலக்கம் 23 –IX பிரகாரம் புற்கள் கொள்வனவு செய்வதற்காக மீண்டும் விலை கோரப்படுவதற்கு தீர்மாணிக்கப்பட்டிருப்பினும் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 காட்டு யானைகளின் ஊடுறுவல் தேவைகள்

-------------------------------------------------------------

காட்டு யானைகளின் இருப்பிட தேவைகளை நிறைவேற்றுவதற்காக குறிப்பிடத்தக்க பிரதேசமொன்று அவைகளின் வாழ்விடமாக பயன்படுத்தப்படும். தாயை முதன்மையாக கொண்ட காட்டுயானைகள் கூட்டம் அவைகளின் வீடு பகுதியாக ஏறத்தாழ 2,540 ஹேக்கர் பயன்படுத்தும் எனவும், ஆண் யானை 13,376 ஹேக்கர் சாதாரண நடத்தைக்காக பயன்படுத்தும் எனவும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. 2011 ஆம் வருடத்தில் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மேற்கொண்ட நாடு முழுவதுமான காட்டு யானைகளின் கணக்கெடுப்பின் பிரகாரம் காட்டு யானைகளின் எண்ணிக்கையில் 67.2 சதவீதம் வன சீவராசிகள் பிராந்தியங்களிலும் 29.78 சதவீதம் வன பாதுகாப்பு திணைக்கள இருப்பிடங்களிலும், 3.02 சதவீதம் சுயாதீனமாக பரவியுள்ள காடுகளில் பரந்து வாழ்கின்றமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சுயாதீனமாக பரவியுள்ள காடுகளில் சுற்றித் திரிகின்ற 3.02 சதவீதமான யானைகள் யானைகள் மனிதர்கள் மோதலுக்கு நேரடியாக தொடர்புடையவை என வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் விசுவசிக்கின்றது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.


(அ) யானை இடம்பெயர்கின்ற விலங்காவதுடன், ஒரு நாளைக்கு 20 தொடக்கம் 25 கிலோமீட்டர் தூரம் பயனிக்கும். யானைகள் மிகவும் செயற்திறனாக செயற்படுவது இரவு நேரத்திலாகும். யானைகள் பாரிய அளவு உணவு எடுப்பதினால் நீண்ட தூரம் பயனிக்கும். காட்டு ஆண் யானைகள் மதம் பிடித்த காலத்தில் 600 சதுர கீலோ மீட்டர் அளவு பரந்த பிரதேசத்தில் பயனிக்கும். அதனால், 997 ஹேக்கர் மட்டும் எல்லைக்குட்படுத்தப்பட்ட தடுப்பு மத்திய நிலையத்திற்கு இந்த யானைகளை அடைத்து வைப்பிதில் அந்த யானைகளின் இயற்கையான நடத்தை கோலத்தை அறிவிப்பதற்கு முடியுமான விதத்தில் சுதந்திரமாக வாழ தேவையான சூழல் இழந்து காணப்பட்டது.

(ஆ) விலங்குகளுக்கு வாழ்வதற்கு தகுதியான வாழ்விடமாகவும் திருப்திகரமான வாழ்வாதாரத்தை பேணிச்செல்வதற்கு தகுதியான சுற்றாடல் காணப்படுவது உயிரியல் தேவையாகும். தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுவது ஆண் காட்டு யானைகள் ஆவதுடன், பெண் காட்டு யானைகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதனால் விலங்குகளின் மரபணுக்களை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதை தடுக்கிறது. ஆண் காட்டு யானைகளை பிடித்து அடைத்து வைப்பதில் அந்த விலங்குகள் இறத்தல் அல்லது சதாகால கைதிகளாக ஆக்கப்படுதல் இலங்கையின் யானைகளின் மரபணு வலிமை இழக்கப்படுவதற்கு காரணமாக காணப்படும்.

### 3.3.3 VF – Radio கழுத்து பட்டி அணிவித்தல்

-------------------------------------------------------

காட்டு யானைகள் பாதுகாப்பாக உயிர் வாழ்கின்றதா என்று தேடுதல் மற்றும் விபத்துக்கு உள்ளானால் கண்டுபிடித்துக் கொள்வதற்காக திணைக்களத்தினால் பின்பற்றப்படுகின்ற முறையானது **VF – Radio** கழுத்து பட்டி அணிவித்தல் அகும். ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தில் மூன்று யானைகளுக்காக கழுத்து பட்டி அணிவித்தல் மேற்கொள்ளப்படடிருந்தது. அது தொடர்பான தரவுகள் பின்வருமாறு.




மூன்று யானைகளுக்காக மட்டும் கழுத்து பட்டி அணிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுகின்ற மற்றைய 49 யானைகளின் நடத்தை கோலம் ஆய்வு செய்வதற்கு முறையான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படாமை

---

### 3.4.1 யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தின் எண்ணக்கருவின் செல்லுப்படித்தன்மை

---

(அ) யானைகள் மனிதர்கள் மோதலை குறைத்தல் நோக்கமாக கொண்டு 2016-2018 காலக்கட்டத்தினுள் வருடத்திற்கு பிரச்சணையான காட்டு யானைகள் 10 தொடக்கம் 15 இடையேயான அளவு பிடித்து தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்பட்டிருப்பினும், அந்த காலத்தினுள் யானைகள் மரணம், மனிதர்கள் மரணம், சொத்துக்கள் பாதிப்பு மற்றும் சரீர பாதிப்புக்களின் குறைவு ஏற்பட்டிருக்கவில்லை.

(ஆ) இன்னுமாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணத்தினால் காடுகள் எண்ணிக்கை குறைவதுடன் நாளுக்கு நாள் வன்முறையான யானைகள் உருவாக்கப்படுகின்றன. அதனால், இவ்வாறான தடுப்பு மத்திய நிலையங்கள் நிர்மாணித்தல் யானைகள் மனிதர்கள் மோதல் குறைப்பதற்கு காணப்படுகின்ற ஒரே வழி இல்லையென அவதானிக்கப்பட்டது.

(இ) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் குறிக்கோள் நிகழ்கால மற்றும் எதிர்கால தலைமுறைக்கான வன சீவராசிகள் மரபுரிமைகளை பாதுகாப்பதாகும். மனிதர்களின் சுதந்திரம் மற்றும் தேவைக்காக யாகைளை தடுத்து வைத்திருத்தல் இந்த மத்திய நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. மனிதர்களின் பிழைப்பிற்காக மட்டும் காட்டு யானைகள் தடுத்து வைத்தலினால் யானையின் வழமையான வாழ்க்கை கோலத்திற்கு வெளியே சிறைப்படுத்தி வைப்பதினால் யானைகளின் சமூகம் கட்டுப்படுத்தல் மேற்கொள்வதினூடாக யானைகள் பாதுகாக்கப்படாமல் மனிதர்கள் பாதுகாக்கப்படல் இதனூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சரவை குறிப்பானை இலக்கம் 8$2012 பிரகாரம் வன்முறையாக செயற்படும் காட்டு யானைகளை பிடித்து பாதுகாத்து மறுவாழ்வழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டிருப்பினும் அவ்வாறான பாதுகாப்போ மறுவாழ்வோ மேற்கொள்ளப்பட்டமைக்கு சாட்சிகள் காணப்படவில்லை.

### 3.4.2 ஹொரவ்பதான தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுகின்ற யானைகளின் சுகாதார நிலை

---

(அ) தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்பட்ட 51 யானைகளில் 15 யானைகளின் சுகாதார நிலை சேர்க்கபட்ட சந்தர்ப்பத்தில் மோசமான நிலையில் காணப்பட்டமை ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தின் யானைகள் சேர்க்கப்படும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அந்த விலங்குகள் தொடர்பாக எந்தவொரு பின்னூட்டலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த தடுப்பு மத்திய நிலையத்தினுள் உள்ளக போக்குவரத்து அமைப்பொன்று தயாரிக்கப்பட்டிருப்பினும் தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்பட்ட 51 தனி யானைகளின் உணவு தேவைகள், சுகாதார வகதிகள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு முறையான முறைமையொன்று காணப்படவில்லை.

(இ) வனவிலங்குகள் மறுவாழ்வு மத்திய நிலையங்களை முகாமைத்துவம் செய்தல், வன சீவராசிகள் சுகாதார முகாமைத்துவ பிரிவின் பிரதான செயற்பாடு மற்றும் கடமைகளுக்குள் உட்படுத்தப்பட்டிருப்பினும், ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் முகாமைத்துவம் செய்யும் பணி முறையாக மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.3 காட்டு யானைகள் தப்பிச்செல்லல்

---

(அ) தடுப்பு மத்திய நிலையத்தில் சேர்க்கப்படுகின்ற யானைகளுக்கு அந்த இடம் வெளி (விருந்தினர்) இடம் என்பதனால் எப்போதும் தப்பிச்செல்வதற்கு முயற்சி செய்வதுடன், தப்பிச்சென்ற சில யானைகளுக்கு தன்னுடைய பூர்வீக நிலத்தினை தேடுவதற்கு முடியாமல், கிராமங்களுக்கு வந்து சுற்றிக்கொண்டு இருந்ததெனவும், இன்னும் சில யானைகள் அந்த யானைகளின் ஆதி வாழ்விடத்தினை தேடி சென்றுள்ளதெனவும், VF ரேடியோ கழுத்து பட்டிகள் தரவு குறிப்புக்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) எப்போதும் இந்த யானைகள் தப்பிச்செல்வதற்கு முயற்சி செய்வதனால் 2017 செப்தெம்பர் 20 ஆம் திகதி தொடக்கம் 2019 ஒக்தோம்பர் 14 ஆம் திகதி மட்டும் 06 சந்தர்ப்பங்களின் போது யானைகளினால் மின்சார வேளிக்கு பாதிப்பினை ஏற்படுத்தி தப்பிச்சென்றுள்ளதுடன், உடைக்கப்பட்ட மின்சார வேளி

தூண்களை மேம்படுத்துவதற்கு ரூபா 683,417 ஆன செலவொன்று ஏற்க்கப்பட்டிருந்தது.

### 3.4.4 யானைகள் இடம்பெயர்தல்

---------------------------------------------

யானைகள் இடம்பெயர்தலின் கீழ் யானைகள், பெண் யானைகள் தாம் வாழ்கின்ற வாழ்விடங்களில் உணர்விழப்பு செய்து பிடித்து கட்டி லொரி போன்ற போக்குவரத்து ஊடகத்தினை பயன்படுத்தி விலங்குகளின் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து அகற்றப்படும். சுகாதார நிலை மோசமான யானைகள் உணர்விழத்தல் மற்றும் போக்குவரத்தின் போது பாதுகாப்பான முறைமைகள் பின்பற்றாமை காரணத்தினால் மோசமான சுகாதார நிலையில் காணப்பட்ட இரு யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு கொண்டு வரும் போது லொரியிலிருந்து விழுதல் மற்றும் மீண்டும் நிற்பதற்கு முடியாமையின் காரணத்தினால் மரணித்திருந்தன.

பின்வரும் புகைப்படங்களின் மூலம் காட்டப்படுவது கணே ஹிலா மற்றும் ஒரு தந்தமுடைய யானை (தனி தலயா) ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கு கட்டப்பட்டிருந்த முறையாகும்



கணே ஹிலா



தனி தலயா

## 3.5 லுனுகம்வெஹெ யானைகள் தடுப்பு மத்திய நிலையம்

------------------------------------------------------------------------------------------

ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையத்தில் மேற்குறிப்பிடப்பட்ட குறைப்பாடுகள் காயப்படும் போதே இலங்கையில் வாழ்கின்ற வன்முறையான யானைகள் தடுத்து வைக்கும் மத்திய நிலையமொன்று (3000 ஹேக்கர்) உலக வங்கியின் உதவியுடன் ESCAMP செயற்திட்டத்தின் கீழ் லுனுகம்வெஹெர தேசிய பூங்காவினுள் நிர்மாணிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2017 ஆகஸ்து 11 ஆம் திகதி அனுமதி பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சாதாரணமான காட்டு யானையொன்றின் வாழ்விடமாக $50Km^2$ - $600Km^2$ ஆன அளவு கருதப்பட்டிருப்பினும், பரிந்துரைக்கப்பட்ட லுனுகம்வெஹெர தடுப்பு மத்திய நிலையம் சுமார் $35Km^2$ அளவுடையதாக இருப்பதனால் அந்த நில பகுதி ஒரு யானைக்கேனும் சுதந்நிரமாக சுற்றித்திரிவதற்கு போதுமானதல்ல.

(ஆ) மத்தல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக அந்த பிரதேசத்தில் வாழ்ந்த சுமார் 400 யானைகளுக்கு அவைகளின் வாழ்விடம் இழக்கப்பட்டதுடன் அவைகள் லுனுகம்வெஹெர பாதுகாக்கப்பட்ட காட்டிற்கு துரத்தப்பட்டிருந்தன. அதனூடாக லுனுகம்வெஹெரவில் யானைகளின் எண்ணிக்கை மேலும் உயர்வாக காணப்படும் சந்தர்ப்பத்தில் அந்த பிரதேசத்தின் மேலும் நில பகுதி இவ்வாறான நிர்மாணிப்பிற்காக பயன்படுத்துவதனால் வன விலங்குகளுக்கு தம் வாழ்விடம் குறைதல் அவதானிக்கப்பட்டது.

(இ) யானைகள், மான்கள், எருமை, சிறுத்தை, நரி போன்ற விலங்குகள் பாரிய கூட்டமாக லுனுகம்வெஹெர தேசிய வனத்தை வாழ்விடமாக கொண்டு வாழ்கின்றன. அந்த விலங்குகள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு விலங்குகள் எவ்வளவு காணப்படுகின்றன தொடர்பான இறுதி தீர்வு மேற்கொள்ள வேண்டுமென இந்த செயற்திட்டம் மேற்கொண்டு செல்லும் போது நடத்தப்பட்ட முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டங்களின் போதும் ஆலோசனை குழு கூட்டத்தின் போதும் தீர்மாணிக்கப்பட்டிருப்பினும் அவ்வாறான கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை




(ஈ) பரிந்துரைக்கப்பட்ட யானைகள் வேளிகள் நிர்மாணிப்பதற்கு முன்னர் அங்கு காணப்படுகின்ற யானைகள் அந்த பிரதேசத்திலிருந்து முழுமையாக அகற்றப்பட வேண்டியதுடன், அவ்வாறு அகற்றப்படுகின்ற விலங்குகளின் பிழைப்பிற்காக வளப்படுத்தல் தொடர்பாக திட்டம் தயாரிக்க வேண்டியிருப்பினும் அவ்வாறான எந்தவொரு திட்டமும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) அகற்றப்படுகின்ற விலங்குகள் தடுப்பு மத்திய நிலையம் காணப்படுகின்ற பூமியிலிருந்து வெளியே துரத்தப்பட்டிருப்பினும் அந்த பிரதேசத்திலிருந்து வெளியே தற்போது காணப்படுகின்ற விலங்குகளுக்கு மற்றும் அகற்றப்படுகின்ற விலங்குகளுக்காக உணவு, நீர் மற்றும் இடம் பற்றாக்குறையாகவிருந்தால் வரட்சி காணப்படுகின்ற காலங்களில் விலங்கு பேரழிவு ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் உண்டு.

(ஊ) தடுப்பு மத்திய நிலையம் அமைத்தலின் பிரதான நோக்கம் வன்முறையான யானைகளை மறுவாழ்வழித்தலாகும். எனினும் ஏதேனுமொரு யானை இந்த இடத்திற்கு கொண்டு வந்து கையளிக்கபட்ட பின்னர் அந்த பணி மேற்கொள்ளப்படுவது எவ்வாறு என்பது தொடர்பாக முறையான முறைமையொன்று தயாரித்தல் வேண்டுமெனவும் விலங்கு மறுவாழ்வழிக்கப்பட்டமை அடையாளப்படுத்த முடியுமான வகையில் அளவுகோல் அடையாளப்படுத்தப்பட வேண்டுமெனவும் 2018 ஏப்ரல் 21 ஆம் திகதி நடைப்பெற்ற முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டத்தின் போது தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இது வரையில் அவ்வாறான முறைமையொன்றோ அல்லது அளவுகோல் மற்றும் அடையாளப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுகின்ற யானைகள் மறுவாழ்வழிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்ற முறைமையொன்று திட்டமிடப்படாமையினால் ஒரு நாளில் அதன் இடவசதி போதுமானதாக காணப்படாது.

## 04. பரிந்துரைகள்

---------------------

4.1 தடுப்பு மத்திய நிலையத்திற்கு யானைகள் விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து தொடர்ந்து அந்த யானைகளின் பாதுகாப்பு தொடர்பாக றேப்பார்வை செய்ய வேண்டுமெனவும் யானைகள் தொடர்பாக முறைமையான பின்னூட்டல் பேணப்படல் மற்றும் அதை அடிப்படையாக கொண்டு விலங்குகளின் நலன் முறையாக பேணிச்செல்ல வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.2 சுகாதார நிலைமை மோசமான யானைகள் தடுப்பு மத்திய மத்திய நிலையத்திற்கு விடுவிக்கப்பட கூடாததுடன் உட்சேர்க்கப்படுவதற்கு முன்னர் சுகாதார நிலை மோசமான யானைகளுக்கு தேவையான வைத்திய வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு அது தொடர்பாக பின்னூட்டல் மேற்கொள்ளப்பட பரிந்துரைக்கப்படுகின்றது.

4.3 யானைகளுக்கு முறையாக சிகிச்சை அளிப்பதற்கு மற்றம் நோய்கள் தடுப்பதற்கு போன்றவற்றிற்கு முறையான முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.4 யானைகளுக்கு தகுதியான உணவுகள் வெளிநபர்கள் வழங்கல் மேற்கொள்ள்பட வேண்டியதுடன் உணவுகளின் குணம் தொடர்பாக முறையாக மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.5 ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் யானைகளுக்கு விரும்பத்தக்க இடமாக உருவாக்குவதற்காக இன்னுமாக அங்கு புற்தரைகள் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட பரிந்துரைக்கப்படுகின்றது.

4.6 யானைகளுக்கான தேவையான நீர் போதுமானதாக வழங்குவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கபட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.7 மின்சார வேளிகளை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.8 யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு போக்குவரத்து மேற்கொள்ளும் போது பாதுகாப்பான போக்குவரத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.9 தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுகின்ற யானைகளுக்கு சுகாதாரமுடைய, நல்ல போசாக்கு நிலை மற்றும் பாதுகாப்பின் கீழ் தமது நடத்தை கோலத்தினை அறிவிக்கக் கூடிய பிரகாரம், பயம் மற்றும் மளஅழுத்தமற்று வாழ்வதற்காக தேவையான வசதிகள் வழங்கப்படவேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.10 யானைகள் தடுப்பு மத்திய நிலையத்திற்கு சேர்க்கப்படுகின்ற அனைத்து யானைகளுக்கும் VF-Radio கழுத்து பட்டி அணிவிப்பதற்கான வேலைதிட்டமொன்று மேற்கொள்ளபட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.11 தடுப்பு மத்திய நிலையத்திற்கு புதிதாக யானைகள் சேர்க்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தடுப்பு மத்திய நிலையத்தில் வாழ்கின்ற மற்றைய யானைகள் இடையில் பதற்றம் ஏற்படுகின்துடன், அதை தடுப்பதற்காக முதலாவது புதிய யானைகள் வேறாக வைக்கப்பட்டு படிப்படையாக மற்றைய யானைகளுடன் இடைப்படுவதற்கு சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

4.12 யானைகள் மனிதர்கள் மோதல்களை குறைப்பதற்காக விவசாய அமைப்புக்கள் இணைந்து பயிர் சேதத்திற்காக பயிர் செய்யப்படும் காலத்தில் மட்டும் தற்காலிக மின்சார வேலியொன்று அமைக்கப்படல் மற்றும் சொத்து மற்றும் உயிர் சேதங்களை தடுப்பதற்காக கிராமத்தவர்கள் இணைந்து மின்சார வேலியொன்று நிர்மாணிப்பதற்காக மக்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்து.

4.13 வேறு தடுப்பு நிலையங்கள் அமைப்பதற்கு முன்னர் ஹொரவ்பதான யானைகள் தடுப்பு மத்திய நிலையம் வெற்றிகரமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

டபீள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி